# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 28/2019**

**Deposition of Witness for PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரபு | Caste | : | |
| Father/Husband Name | : | பெருமாள் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( all Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 24.03.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது கொடிகுளத்தில் குடியிருந்து வருகிறேன். எதிரிகள் எனது உறவினர் ஆவார்கள். அரசு தரப்பு சாட்சிகளை எனக்கு தெரியும். நான் கடந்த 2017ம் வருடம் எதிரிகள் மீது இருந்த மனகசப்பின் காரணமாக எதிரிகள் மீது மிகைப்படுத்தி புகார் அளித்துவிட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு **(அ.சா.ஆ. 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது நான் எதிரிகளுடன் சமாதானம் செய்துகொண்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழுங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

கடந்த 03.10.2017ம் தேதி எங்கள் ஊரில் கோவில் திருவிழா நடைபெற்றுகொண்டிருந்தது என்றும், அப்போது இரவு 9.00 மணிக்கு நானும் எனது மைத்துனர் பெருமாள் என்பவரும் எங்கள் ஊர் பஸ் ஸ்டாப்பில் நின்றிருந்தோம் என்றும் அப்போது அங்கு வந்த மேற்படி எதிரிகள் முன்

விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு எங்களை பார்த்து அசிங்கமான வார்த்தையால் பேசினார் என்றும், எதிரி அருண்குமார் கையில் வைத்திருந்த பீர் பாட்டியலால் சாட்சி பெருமாள் தலையில் அடித்து இடது தலையிலும் இடது உள்ளங்கையிலும் குத்தி கிழித்தார் என்றும், எதிரி கல்யாணசுந்தரம் கையில் வைத்திருந்த பீர் பாட்டிலால் பெருமாள் உச்சந்தலையில் குத்தினார் என்றும், இதனால் பெருமாளுக்கு இரத்தகாயம் ஏற்பட்டது என்றும், அதை விலக சென்றபோது எதிரி கல்யாண சுந்தரம் கீழே கிடந்த கம்பை எடுத்து எனது வலது கையில் அடித்து வீக்கக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும், அப்போது அருகில் இருந்த சாட்சிகள் எதிரிகளை விலக்கிவிட்டபோது, எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்து சென்றதாக கூறி, எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க புகார் அளித்துவிட்டு, தற்போது எதிரிகள் எனது உறவினர் என்பதால் அவருடன் சமாதானம் செய்துகொண்டு, அவருக்கு ஆதரவாகவும், உண்மைக்கு புறம்பாகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எதிரிகளுடன் சமாதானம் செய்துகொண்டு, சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சமாதான மனு **(எ.த.சா.ஆ. 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.03.25 11:02:46 +0530